DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 314/2019

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.உதயகுமார் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 produced.)
21.05.2024 at 03.00 PM

முதல் விசாரணை:–

1. நான் கரிசல்குளம் கிராமத்தில் குடியிருந்து கான்ட்ராக்ட் நிறுவனத்தில் எஞ்சினியராக பணிபுரிந்து வருகிறேன்.

2. எங்களுக்கு சொந்தமாக ஆடுகள் உள்ளது. எனது பெற்றோர்கள் ஆடுகளை மேய்த்து வருகிறார்கள். நிலக்கோட்டையில் உள்ள பகுதியில் ஆடுகளை மேய்த்து அங்கே தங்கியிருப்பார்கள். வீட்டில் நான் மட்டும் இருந்து வருகிறேன். நானும் பணி சம்மந்தமாக வெளியில் சென்று விடுவேன்.

3. எனது வீட்டின் அருகில் உள்ள எனது அத்தை வீட்டில் விளக்குகளை போடுவது வழக்கம். கடந்த 2017ம் ஆண்டு ஒருநாள் நான் அருப்புக்கோட்டையில் இருந்தபோது எனது அத்தை காலையில் வழக்கம்போல் வீட்டில் லைட்டை அணைப்பதற்காக வந்ததாகவும், வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதாகவும் எனக்கு தகவல் சொன்னார்.

4. உடனடியாக நான் வீட்டிற்கு கிளம்பி வந்தேன். வீட்டிற்குள் சென்று பார்த்தபோது துணிமணிகள் கலைந்து கிடந்தது. வீட்டில் பொருட்கள் எதுவும் இல்லை. பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை.

5. அருகில் இருந்த எனது பெரியப்பா முருகேசன் என்பவரது வீடும் உடைக்கப்பட்டிருந்தது. அவர்கள் வீட்டிலும் பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை.

6. பின்னர் ஊரில் இதுபோன்ற சம்பவங்கள் எதுவும் நடைபெறக்கூடாது என்பதற்காக அன்று மதியம் கடலாடி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.

7. என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார்

மனு அ.சா.ஆ.1 ஆகும்.

8. நான் புகார் அளித்து 6 மாதங்கள் கழித்து எனது வீட்டை உடைத்து திருட முயற்சித்தது 2 நபர்கள் என்று போலீசார் சொன்னார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: – எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.